ஏழை, எளிய மக்கள் முன்னேறுவதை பா.ஜ.க. விரும்பவில்லை

மக்கள் தொகை, சாதிவாரி கணக்கெடுப்பை உடனடியாக தொடங்க வேண்டும்: மத்திய அரசுக்கு ஸ்டாலின் வலியுறுத்தல்

சென்னை, டிச.4–

ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின மக்கள் முன்னேறுவதை பா.ஜ.க. அரசு விரும்பவில்லை.

மத்திய அரசு மக்கள் தொகை, சாதிவாரி கணக்கெடுப்பை உடனடியாக தொடங்க வேண்டும் என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தி உள்ளார்.

தி.மு.க. எம்.பி. வில்சனின் ஒருங்கிணைப்பில் அகில இந்திய சமூக நீதி கூட்டமைப்பின் 3வது தேசிய மாநாடு டெல்லியில் நேற்று நடைபெற்றது.

இந்த மாநாட்டில் அகில இந்திய பிற்படுத்தப்பட்டோர் கூட்டமைப்பின் தலைவரான ஓய்வுபெற்ற நீதிபதி ஈஸ்வரய்யா, 'இந்தியா' கூட்டணியை சேர்ந்த அகில இந்திய தலைவர்களான ஜார்கண்ட் முதலமைச்சர் ஹேமந்த் சோரன், அகிலேஷ் யாதவ், தேஜஸ்வி யாதவ், பரூக் அப்துல்லா, டி.ராஜா, பிருந்தா காரத், சஞ்சய் சிங், வீரேந்திர சிங் யாதவ், தமிழகத்தை சேர்ந்த தலைவர்கள் கி.வீரமணி, வைகோ, திருமாவளவன், ஜவாஹிருல்லா, ஈஸ்வரன், தி.மு.க. எம்.பி.க்கள் கனிமொழி, திருச்சி சிவா, ஆ.ராசா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தி.மு.க. தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள தனது முகாம் அலுவலகத்தில் இருந்து காணொலி மூலம் மாநாட்டில் பேசினார். அவர் பேசியதாவது:

மனிதர்களில் உயர்வு, தாழ்வு என்ற வேறுபாடு இல்லாத நிலையை உருவாக்கத்தான் 'இட ஒதுக்கீடு' எனப்படும் சமூகநீதி உருவாக்கப்பட்டது. ஆண்–பெண் ஏற்றத்தாழ்வை அகற்றத்தான் பெண்ணுரிமைக் கருத்தியல் முன்னெடுக்கப்பட்டது. நாடு முழுவதும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீட்டெடுக்க, இப்படிப்பட்ட மாபெரும் அமைப்பை உருவாக்கி, நாமெல்லாம் ஒன்று சேர்ந்திருக்கிறோம்.

சமூகநீதி எனப்படும் இடஒதுக்கீடு என்பதே சமூகரீதியாகவும், கல்வி ரீதியாகவும் பின்தங்கியவர்களுக்கு தரப்பட வேண்டும் என்பதுதான் இந்திய அரசியலமைப்பு சட்ட வரையறை. இந்த திருத்தத்திற்கு காரணமான தலைவர்கள் பெரியாரும், அண்ணாவும்தான். தமிழ்நாட்டு மக்களுக்கு சமூகநீதி வழங்கியதோடு, இந்தியாவின் மற்ற மாநில ஒடுக்கப்பட்ட மக்களுக்கும், அத்தகைய உரிமை கிடைக்க வழிகாட்டியதும் திராவிட இயக்கம்தான்.

சமூகநீதியை பா.ஜ.க. அமல்படுத்துவது இல்லை

இந்த கருத்தியல்தான் இன்றைக்கு அகில இந்தியா முழுமைக்கும் பரவி இருக்கிறது. ஆனால், சமூகநீதியை பா.ஜ.க. முறையாக அமல்படுத்துவது இல்லை. கடந்த 10 ஆண்டு காலத்தில் மத்திய அரசின் துறைகளில், பிற்படுத்தப்பட்டோருக்கான 27 சதவீதம் ஒதுக்கீடு முழுமையாக வழங்கப்படவில்லை.

ஏழை, எளிய, பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின மக்கள் முன்னேறுவதை பா.ஜ.க. விரும்பவில்லை. அதனால்தான், அவர்கள் சமூகநீதிக்கு எதிராக இருக்கிறார்கள். இடஒதுக்கீட்டில், பொருளாதார அளவுகோலை நுழைக்க துடிக்கிறார்கள்.

ஏழை, எளிய மக்களுக்கு பொருளாதார உதவி செய்வதை நாங்கள் தடுக்கவில்லை. ஆனால், சமூகரீதியாக பின்தங்கியவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய இட ஒதுக்கீட்டை, பொருளாதார அளவுகோலை மட்டுமே அடிப்படையாக வைத்துவிட்டு பொதுப்பிரிவினருக்கும் வழங்குவதைதான் எதிர்க்கிறோம்.

மகளிர் இடஒதுக்கீட்டை தடுத்து, சதி செய்த மாதிரியே, சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்தவும் பா.ஜ.க. அரசு முன்வரவில்லை. சாதிவாரிக் கணக்கெடுப்பை மத்திய அரசு உடனே நடத்த வலியுறுத்தி தமிழ்நாடு சட்டசபையில் நாம் தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறோம். இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு ஆகியவற்றில் சம உரிமை மற்றும் வாய்ப்பு கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் திட்டங்களை தீட்டி, சட்டங்கள் இயற்ற சாதிவாரி மக்கள்தொகை கணக்கெடுப்பு அவசியம்.

2021ம் ஆண்டே எடுக்கப்பட்டிருக்க வேண்டிய மக்கள்தொகை கணக்கெடுப்பை மத்திய பா.ஜ.க. அரசு உடனே தொடங்க வேண்டும். அதோடு இணைத்து சாதிவாரி கணக்கெடுப்பையும் நடத்த வேண்டும். இதை செயல்படுத்த பா.ஜ.க. அரசு மறுக்கிறது. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால், அதை வைத்து உண்மையான சமூகநீதியை வழங்க வேண்டும் என்றுதான் தயங்குகிறார்கள்.

சாதிவாரி கணக்கெடுப்பை எடுக்க மறுப்பது மூலமாக சமூகநீதிக்கும், மகளிர் இடஒதுக்கீட்டு சட்டத்தை தள்ளிப்போட்டதால் பெண்ணுரிமைக்கும் எதிராக இருக்கிறது இந்த பா.ஜ.க. அரசு. இதற்கு எதிராக நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து குரல் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

கடலூரில் புயல் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு

மக்களிடம் குறைகளை கேட்டு நிவாரண பொருட்களை வழங்கினார்

கடலூர், டிச.4 –

புயல் மழையால் பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டத்தின் பல்வேறு இடங்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு சீரமைப்பு பணிகளை முடுக்கி விட்டார். அப்போது பாதிக்கப்பட்ட மக்களிடம் குறைகளை கேட்டு நிவாரண பொருட்களை வழங்கினார்.

கடலூர் மாவட்டத்தில் பெஞ்ஜல் புயல் மழையினால் தென்பெண்ணையாற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு காரணமாக 4,321 குடும்பங்களைச் சேர்ந்த 15,712 நபர்கள் மீட்கப்பட்டு 35 நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடலூர் மாவட்டம் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி ஜி.எஸ்.மகாலில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் புயல் மழை காரணமாக தென்பெண்ணை ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட கீழ்கவரப்பட்டு, கோழிப்பாக்கம், சின்ன பகண்டை, கொங்கராயநல்லூர் ஆகிய கரையோர ஊராட்சிகள் மற்றும் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளர். அங்கு தங்கியுள்ள பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, அரிசி, மளிகை, பெட்ஷீட், புடவை உள்ளிட்ட நிவாரணப் பொருட்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்.

மேலும், கடலூர் – புதுவை சாலையில் அமைந்துள்ள சின்னகங்கனாங்குப்பம், பெரியகங்கனாங்குப்பம் பகுதிகளில் தென்பெண்ணை ஆற்று வெள்ள நீர் புகுந்ததால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பெரியகங்கனாங்குப்பத்தில் நடைபெறும் மருத்துவமுகாமை பார்வையிட்டு ஆய்வு செய்து மருத்துவர்களிடம், முகாமிற்கு வருகைதரும் பொதுமக்களின் எண்ணிக்கை குறித்தும், எந்தவிதமான மருத்துவ தேவைகள் உள்ளன என்றும் கேட்டறிந்தார்.

மேலும் மஞ்சக்குப்பம் விக்னேஷ் மகாலில் அமைக்கப்பட்டுள்ள நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள திடீர் குப்பம், எம்.ஜி.ஆர் நகர், கே.டி.ஆர் நகர், பெண்ணையாற்று சாலை, தட்சிணாமூர்த்தி நகர், நேரு நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 1500 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு துணை முதலமைச்சர் அரிசி, மளிகை பொருட்கள், போர்வை, புடவை, கைலி உள்ளிட்ட நிவாரண பொருட்களை வழங்கினார்.

பின்னர் கடலூர் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், புயல்மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட விளைநிலங்கள், துண்டிக்கப்பட்ட சாலைகள், பழுதடைந்த மின்கம்பங்கள், உயிரிழந்த கால்நடைகள், வீடுகள் உள்பட மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள், இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள சீரமைப்பு பணிகள், எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அனைத்துதுறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

இயற்கை பேரிடரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு பாராட்டு தெரிவித்து, பொதுமக்கள் விரைவில் இயல்பு வாழ்க்கைக்கு திரும்ப அனைத்துதுறை அலுவலர்களும் அர்ப்பணிப்பு உணர்வுடன் தங்களுடைய பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்

இந்த ஆய்வுகளில் அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், வி. செந்தில்பாலாஜி, சி.வெ. கணேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.ஐயப்பன், சபா.இராஜேந்திரன், எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், மேயர் சுந்தரிராஜா, சிறப்பு கண்காணிப்பு அலுவலர்–ஊரக வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் க. நந்தகுமார், தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்ட இயக்குனர் ராமன், மாவட்ட கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கனமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டி முகாம்களில் நிவாரணப் பொருட்கள்: அமைச்சர் சாமிநாதன் வழங்கினார்

ஊட்டி, டிச. 4–

நீலகிரி மாவட்டம், உதகை தலையாட்டிமந்து நகராட்சி நடுநிலைப்பள்ளி நிவாரண முகாம்களில், தங்கி உள்ள பொதுமக்களுக்கு அமைச்சர் மு.பெ. சாமிநாதன், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் முன்னிலையில், நிவாரண பொருட்களை வழங்கினார்.

அதைத் தொடர்ந்து அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கூறியதாவது:

முதலமைச்சர் ஆணைக்கிணங்க, நீலகிரி மாவட்டத்தில் பருவமழையை முன்னிட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டள்ளது. குறிப்பாக தாழ்வான பகுதிகளை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறார்கள். ஏதேனும் அச்சுறுத்தல் சுழ்நிலை ஏற்பட்டால் உடனடியாக வருவாய்த்துறை அலுவலர்கள் உள்ளிட்ட துறை அலுவலர்கள், அந்த பகுதியிலுள்ள பொதுமக்களை பாதுகாப்பாக நிவாரண முகாம்களுக்கு அழைத்து செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்த வகையில், உதகை வட்டத்தில், தலையாட்டிமந்து நகராட்சி நடுநிலைப்பள்ளி நிவாரண முகாம்களில் நொண்டிமேடு மற்றும் தலையாட்டிமந்து ஆகிய பகுதிகளை சார்ந்த 35 குடும்பத்திலுள்ள 102 நபர்களும், அதேபோல் குன்னூர் வட்டத்தில், மேலூர் ஊராட்சி முசாபுரி சமுதாய கூடத்தில் 1 குடும்பத்தை சேர்ந்த 7 நபர்களும், கோத்தகிரி வட்டத்தில் கிருஷ்ணாபுதூர் சமுதாயக் கூடத்தில் 2 குடும்பத்தை சேர்ந்த 7 நபர்கள் மற்றும் மேல்கோப்பையூர் சமுதாயக்கூடத்தில் 10 குடும்பத்தை சேர்ந்த 24 நபர்கள் என மொத்தம் 4 நிவாரண முகாமகளில் 140 நபர்கள் பாதுகாப்பாக தங்கி உள்ளனர்.

மேலும், நிவாரண முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு தேவையான உணவு, குடிநீர் உள்ளிட்டவையும், பாய், போர்வைகள் ஆகிய நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நிவாரண முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு மருத்துவ முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

முன்னதாக நிவாரண முகாம்களில், தங்கி உள்ள பொதுமக்களுக்கு நடைபெற்று வரும் மருத்துவ முகாமினை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகளின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், உதகை நகரமன்றத் தலைவர் வாணிஸ்வரி, துணைத்தலைவர் ரவிக்குமார், உதகை வட்டாட்சியர் சங்கர்கணேஷ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ஜார்ஜ் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தார்.

ஸ்ரீ நாச்சம்மை காட்டன் மில்ஸ் லிமிடெட்
பதிவு அலுவலகம்: கதவு எண்.181,"வசந்தம்"
4வது குறுக்குதெரு, நியூ பேர்லேணட்ஸ், சேலம் – 636016
CIN No. L17115TZ1980PLC000916
Phone No. 0427-2330487
E-mail: sncm @rediffmail.com Website: www.sncmindia.com

அறிவிப்பு

கம்பெனியின் இயக்குனர் குழுவின் 70வது கூட்டம் 11.12.2024 புதன்கிழமையன்று காலை10.15 மணிக்கு கம்பெனியின் பதிவு, அலுவலகத்தில் காணொளிக்காட்சி மூலம் நடைபெற உள்ளது என: அறிவிக்கப்படுகிறது.

இயக்குனர் குழுவின் ஆணைப்படி,
Sd/
இடம் : சேலம் ப.உமையாள்.
தேதி : 03.12.2024 நிர்வாக இயக்குனர்.
DIN NO: 00110260

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க் லிட், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.
(லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்)

ஆன்லைன் இ ஏல முறையில் சொத்து விற்பனை

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு.

புலலலர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (இனி "FIHFCL" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 07.12.2021 அன்று புலலலர்டன் இந்தியா ஹோம் பைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் (இனி "FIHFCL" என்று குறிப்பிடப்படும்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) கவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.603607210315681ன் கீழ், கீழே உள்ள விவரங்களின்படி திரு. கே.பி. ரேவதி, திருமதி. பி.கனியம்மாள் & M/S லேபேஷ் எண்டர்பிரைசஸ் ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 29.11.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.64,22,611/– (ரூபாய் அறுபத்துநான்கு லட்சத்து இருபத்தி இரண்டாயிரத்து அறுநூற்றுபதினொன்று மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் 'எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	09.01.2025
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
ரிசர்வ் விலை	ரூ.23,50,000/– (ரூபாய் இருபத்துமூன்று லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)
டேவணித் தொகை டெபாசிட் (EMD)	ரூ.2,35,000/– (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பத்தைந்தாயிரம் மட்டும்)
KYC உடன் EMDஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	08.01.2025 அன்று மாலை 6:00 மணி வரை (இந்திய நேரப்படி)

ஈடுபெற்ற சொத்துக்களின் விவரம்: அட்டவணை ஏ: 1,16,412 சதுர அடி பரப்பளவில் உள்ள 1,04,733 சதுர அடி அல்லது 2 ஏக்கர் 67 சென்ட் (ஒஎஸ்ஆர் நிலமாக மறைமலை நகர் நகராட்சிக்கு பரிசளிக்கப்பட்ட 11,679 சதுர அடி பரப்பளவைக் கழித்த பிறகு) கலி நிலம் மற்றும் அதன் துண்டுகளும் பகுதிகளும். சர்வே எண். 191/3பி மற்றும் 191/4, பட்டா எண்.2609 (பட்டா எஸ்.எண்.191/3பி1 மற்றும் 191/4ஏ–என்படி) கொண்ட சாய் சாந்தி ஹோம்ஸ், செங்குன்றம் கிராமம், செங்கல்பட்டு தாலுக்கா, காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் மேற்சொன்ன நிலத்தின் எல்லைகள் வடக்கே: எஸ்.எண்.230ல் உள்ள கலி நிலம், தெற்கே: செங்குன்றம் சாலை, கிழக்கே: எஸ்.எண்.191/4பி, 3பி2, 3பி3 மற்றும் 2ஏ2ஏ1–ல் உள்ள சொத்து, மேற்கு: மறைமலைநகர் நகராட்சிக்கு பரிசாக வழங்கப்பட்ட ஒஎஸ்ஆர் நிலம். செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் செங்கல்பட்டு இணை II துணை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது. அட்டவணை–பி: அட்டவணை ஏ–ல் குறிப்பிடப்பட்ட சொத்தில் பிரிக்கப்படாத பங்கு 510.25 சதுர அடி நிலம் மற்றும் நான்கவது மாடியில் A–407ஐக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்பு, பிளாக் ஏ 1,076 சதுர அடி சூப்பர் கட்டிட பரப்பளவைக் கொண்டுள்ளது. (பொதுவான பகுதிகளில் விகிதாசார பங்கை உள்ளடக்கியது). ஸ்டிலிட் தரையில் ஒரு மூடப்பட்ட கார் பார்க் மற்றும் அட்டவணை ஏ: இங்கு மேலே விவரிக்கப்பட்டுள்ள நிலத்தின் மீது கட்டப்பட உள்ள "ரெயின் ட்ரீ பார்க்" என பெயரிடப்பட்ட குடியிருப்பு அடுக்குமாடி கட்டிட வளாகத்தின் ஒரு பகுதியை உருவாக்குகிறது.

தெரிந்த வரை விலைங்கங்கள்	இல்லை

சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொதுமக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின், அது குறித்து ஏலதாரர்கள் திரு. சியாம் நம்பூரி (மொபைல் எண். +919677288418) & திரு. விஷால் ஆதிசேஷன் (மொபைல் எண். +919941016600) ஆகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் IVR எண் (+91–9152219751)ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.comல் அளிக்கப்பட்டுள்ள லிங் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in–ல் பார்வையிடலாம்.

இடம் : காஞ்சிபுரம், சென்னை, தேதி: 04.12.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்காக

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்
பதிவு அலுவலகம்: 27BKC, C–27, G – பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு – 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க் லிட், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.
லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

ஆன்லைன் இ–ஏல முறையில் சொத்து விற்பனை

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 8(6)–ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ–ஏல விற்பனை அறிவிப்பு. பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பிள்ளபிஎச்எல்" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 11.06.2018 அன்று பிள்ளபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி "பிள்ளபிஎச்எல்" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) கவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண்.HOU/CHE/0317/368688ன் கீழ், கீழே உள்ள விவரங்களின்படி திரு. ஜுபாலுன் யு & திருமதி. முல்தாரி பேகம் சர் ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 29.11.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.36,16,044/–(ரூபாய் முப்பத்தாறு லட்சத்து பதினாறாயிரத்து நாற்பத்து நான்கு மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் 'எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	03.01.2025
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
ரிசர்வ் விலை	ரூ.11,00,000/- (ரூபாய் பதினோறு லட்சம் மட்டும்)
டேவணித் தொகை டெபாசிட் (EMD)	ரூ.1,10,000/- (ரூபாய் ஒரு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)
Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	02.01.2025 அன்று மாலை 6:00 மணி வரை (இந்திய நேரப்படி)

சொத்தின் விவரம்: நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். சர்வே எண்கள், விஸ்தீரணம் மற்றும் பட்டா எண்கள் (குறிப்பாக கீழே விவரிக்கப்பட்டுள்ளது) திருமுடிவாக்கம் கிராமம், திருமுடிவாக்கம் கிராம பஞ்சாயத்து, ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் இந்த சொத்து உள்ளது.

Item No.	Survey No.	Extent in Cents	Patta No.	Boundaries: North by Survey No(s)	South by Survey No(s)	East by Survey No(s)	West by Survey No(s)
I	124/2	131	1654	124/1	228/1,228/2 & 232/1B	124/1 & 232/1B	125/2
II	233/1B	76.50	1541	232/2 & ; 233/1A	230,243/1, 243/2A & 243/2B	233/2B, 233/1A	231/1 & 232/2
III	230	126	1086	229/3,231/1 233/1B	244 & 243/1	243/1	229/3 & 245
IV	243/1	174	1086	233/1B	247/1 & 248/1A1	243/2A	230 & 244
V	243/2A	22	1086	233/1B	248/1A1	243/2B	243/1
VI	243/2B	150	1086	233/1B & 233/2B	242/1A, 248/1A1, 248/1A2 & 248/1A3	242/1A & 234/1B	243/2A & 242/1A
VII	242/1A PART	90.92	1086	243/2B & 234/1B	248/1A3, 248/1A4, & 248/2A1	12 meter road in 242/1A PART & 243/2B,234/1B	243/2B
VIII	228/2	44	1520	124/2	229/3 & 231/2	232/1B & 232/2	228/1
IX	229/3	111	1521	228/1,228/2 &;231/1	245 & 230	230 & 231/1, 231/2	229/1,229/2 & 245
X	231/1	11	1559	232/2, 228/2	231/1,229/3	232/2	229/3
XI	231/2	75	1559	231/2	230	232/2 & 233/1B	229/3
XII	232/1B	53.50	1559	124/2 & 232/1A	232/2	232/1A	124/2,228/2 &232/2
XIII	232/2	49.50	1559	232/1B	231/2 & 233/1B	232/1B, 233/1B	228/2,231/1 & 231/2
XIV	233/2B	21	1558	233/2A	243/2B	233/2A	233/1B
XV	244	196	1535	230	246/1 &247/1	243/1	245

விஸ்தீரணம் அயிட்டம் எண்.I முதல் XV வரை மொத்தம் 13 ஏக்கர் மற்றும் 31.42 சென்ட் நிலம் தென் சென்னை பதிவு மாவட்டம் மற்றும் படப்பை சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. அட்டவணை "B" : 235 சதுர அடி பிரிவுபடாத பங்கு நிலத்துடன் அபார்ட்மெண்ட் எண். N505, ஐந்தாவது தளம்,பிளாக் எண். N, திட்டத்தின் பெயர் "பாம் சிரேரா" அபார்ட்மெண்டில் உள்ள சூப்பர் பில்டப் ஏரியா 601 சதுர அடி மற்றும் அட்டவணை A'ல் குறிப்பிடப்பட்ட சொத்தில் மிகவும் விரிவாக விவரிக்கப்பட்டுள்ள பொதுப் பகுதி உட்பட அனைத்தையும் உள்ளடக்கி உள்ளது.

தெரிந்தவரை விலைங்கள் : இல்லை

சர்பாசி சட்டப் பிரிவு 13–ன் உப பிரிவு 8–ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பாதுகாப்பு நலன் கருதி தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்ம